IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO.258/2008**

Deposition PW 1 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 20.12.2024 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | திருமதி.அருணா | Father's Name : | லேட்.கோவிந்தப்பா |
| Village : | | Taluk : | |
| -- | | Calling : | |
| -- | | Age : | 34 |
| வா.சா. : | 1 | | |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**2**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை **:**

**1.** எனது தந்தை பெயர் திரு.கோவிந்தப்பா ஆகும். எனது தந்தைக்கு வேறு பெயர்கள் ஏதும் இல்லை. அனைத்து ஆவணங்களிலும் அவருடைய பெயர் கோவிந்தப்பா என்று தான் உள்ளது, நில ஆவணங்களிலும் அவ்வாறு தான் உள்ளது. எனது பள்ளிச்சான்றிதழில் எனது தந்தை பெயர் திரு.கோவிந்தராஜ் என்றுஉள்ளது, எனக்கு பிறகு என்னுடன் பிறந்த சகோதர சகோதரிகளின் பள்ளிச்சான்றிதழில் எனது தந்தை பெயர் திரு.கோவிந்தப்பா என்று உள்ளது. எனது பிறப்பு சான்றிதழில் என்து தந்தை பெயர் திரு.கோவிந்தராஜ் என்று உள்ளது, ஆனால் அதை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி திரு.தேக்கப்பா (எ) முனியப்பா எனது தாத்தா ஆவர். 1ம் பிரதிவாதியின் மனைவி பெயர் திருமதி.கிருஷ்ணம்மா ஆகம். திருமதி.கிருஷ்ணம்மாவின் சகோதரி பெயர் திருமதி.கௌரம்மா என்றால் சரிதான். திருமதி.கௌரம்மாவின் மகன் தான் எனது தந்தை திரு.கோவிந்தப்பா என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி அவருடன் சேர்த்து அவருடன் பிறந்தவர்கள் 5 நபர்கள் ஆவர். அவர்களின் பெயர்கள் திரு.பெத்தப்பாப்பையா, திரு.சின்னபாப்பையா, திரு.முனியப்பா மற்றும் திரு.வெங்கடசாமி

ஆகும். இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி மேற்குறிப்பிட்ட திரு.முனியப்பாவின் மகன் என்றால் சரிதான். இவ்வழக்கில் 1ம் பிரதிவாதியின் பதில் உரையை நான் படித்துப்பார்த்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்க்கு தெரியும். நான் பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி அவருடைய பதில் உரையில் எனது த்ந்தை பெயரில் இஸ்டதானப்பத்திரமோ அல்லது தத்து ஆவணமோ ஏற்படுத்தவில்லை என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேலும் இவ்வழக்கில் தாக்கல்செய்யப்பட்டுள்ள வ.சா.ஆ.1- சுவீகார பத்திரம் மற்றும் வா.சா.ஆ.2- இஸ்டதானப்பத்திரம் போலியாக தயார் செய்யப்பட்டுள்ளதாக 1ம் பிரதிவாதியின் பதில் உரையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் மேற்படி ஆவணங்கள் சட்டப்பூர்வமாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும்.

3. 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய மனைவி வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஏற்படுத்தவில்லை என்றாலும், ஆகவே அதன் அடிப்படையில் எனக்கு இவ்வழக்கை தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றாலும், சரியல்ல, எனது சிறுவயதிலேயே 1ம் பிரதிவாதி மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்திய விவரத்தை தெரிவித்துள்ளார். எனது வாதுரையில் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது தந்தையை தத்து எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ள காரணத்தினால், 1ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர்கள் இவ்வழக்கில் கட்சி சேர்த்திருக்கவேண்டும் மென்றாலும், அவர்கள் இவ்வழக்கில் அவசியத்தரப்பினர் என்றாலும் சரியல்ல. நான் குறிப்பிடுவதுபோல் வா.சா.ஆ.1 மற்றம் வா.சா.ஆ.2 எனது தந்தை பெயரில் ஏற்படுத்தி இருந்தால் அதில் அவருடைய பெயர் ஆனது திரு.கோவிந்தப்பா என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும் என்றாலும், மாறாக கோவிந்தராஜ் என்று குறிப்பிடப்பட்டுள்ள காரணதினால், மேற்படி ஆவணங்கள் எனது தந்தையால் போலியாக தயால் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

**4.** 1ம் பிரதிவாதி 2012 ம் ஆண்டு காலம் சென்றார். 2006ம் ஆண்டே 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு வழக்கு பட்டிகை 2ம் அயிட்டம் சொத்தினை கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சொத்தானது புல எண்.416-ல் உள்ளது. புல எண்.416 மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்று எனக்கு தெரியாது, எங்களுக்கு 65 செண்ட் உரிமை உள்ளது. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே புல எண்.416ல் உள்ள நிலமானது புல எண்.416/2 என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், அச்சமயத்தில் எங்களுக்கு அவ்விவரம் தெரியவில்லை. புல எண்.416/2-ல் மொத்தம் 86 செண்ட் விஸ்தீரணம் கொண்ட நிலம் உள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. 1986 கால கட்டத்தில் 1ம் பிரதிவாதி அவருடைய சகோதரருடன் கூட்டுக்குடும்பமாக இருந்தார் என்றால் சரியல்ல, அவர் தனியாக பிரிந்து எங்களுடன் தான் வசித்து வந்தார். 1986-ல் 1ம் பிரதிவாதி அவருடைய சகோதரருடன் கூட்டுக்குடும்பமாகதான் இருந்தார் என்றாலும், ஆகவே அவருக்கு வா.சா.ஆ.2 ஆவணம் எழுத அவசியம் ஏற்படவில்லை என்றாலும், அவ்வாறு 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.2 எழுதி யிருந்தாலும், அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல, 1ம்பிரதிவாதி மேற்படி கால கட்டத்தில் பாகப்பிரிவினை செய்து தனி சுவாதீனத்தில் இருந்து வந்ததை குறித்து யு.டி.ஆர் பட்டாவானது அவருடைய பெயரில் வழங்கப்பட்டது.

5. நான் குறிப்பிடுவதுபோல் யு.டி,ஆர் பட்டாவானது 1ம்பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டிருந்தால் உட்பிரிவு செய்யப்பட்ட பின்பு வழங்கப்பட்ட புல எண்களை தான் வா.சா.ஆ.2-ல் கறிப்பிட்டுப்பார் என்றாலும், அவ்வாறு குறிப்பிடாத காரணத்தினால் நான் தெரிவிப்பதுபோல் 1ம் பிரதிவாதி பெயரில் யு.டி.ஆர் பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. 2000ம் ஆண்டில் தான்1ம் பிரதிவாதியும் அவருடைய சகோதரர்களும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டதாக 1ம் பிரதிவாதியின் பதில் உரையில் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது பொய்யான விவரம் ஆகும். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை ஆனது 2000ம் ஆண்டு தான் நடந்தது என்றாலும்,அதன் அடிப்படையில் தான் புல எண்.416 ஆனது உட்பிரிவு செய்யப்பட்டு 86 சென்ட் விஸ்தீரணம்கொண்ட நிமலமானது புல எண்.416/2-ல் உட்பிரிவு செய்யப்பட்டது என்றாலும், அதன் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதி 2ம்பிரதிவாதி 2006ம் ஆண்டு மேற்படி சொத்து குறித்து கிரய ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

6. 2006ம் ஆண்டு 2ம் பிரதிவாதிக்கு கிரய ஆவணம் ஏற்படுத்தியதின் அடிப்படையில் 2ம்பிரதிவாதி புல எண்.416/2-ல் உள்ள சொத்திற்குரிய வருவாய் ஆவணங்களை அவருடைய பெயரில் பெயர் மாற்றம் செய்து கொண்டார் என்றாலும், தற்போது வரை 2ம் பிரதிவாதிதான் மேற்படி சொத்தின் சுவாதீணத்தில் இருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல. 2006ம் ஆண்டிற்கு பின்பு இருந்து நாங்களோ அல்லது பிரதிவாதிகளோ மேற்படி சொத்தின் சுவாதீனத்தில் இருந்தது கிடையாது. வழக்குப்பட்டிகை சொத்தின் சுவாதீனத்தில் நாங்கள் எக்காலத்திலும், இருந்தது கிரடையாது எனன்றால் சரியல்ல, அதில் நாங்கள் விவசாயம் செய்துள்ளோம். வழக்குப்பட்டிகை சொத்துக்களில் நாங்கள் விவசாயம் செய்தததை காண்பிப்பதற்குரிய வருவாய் ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது தந்தை இறந்த உடனேயே இவ்வழக்கினை தாக்கல் செய்த காரணத்தினால் எங்களால் வருவாய் ஆவணங்களை எங்களுடைய பெயரில் பெயர் மாற்றம் செய்துகொள்ள இயலவில்லை. வா.சா.ஆ.2 எனது தந்தையால் போலியாக தயார்செய்யப்பட்டது என்றாலும், அதன் அடிப்படையில் எனது தந்தைக்கோ அல்லது எங்களுக்கோ வழக்கு பட்டிகை சொத்துக்களில் சுவாதீனம் கிடைக்கப்பெறவில்லை என்றால் சரியல்ல. 2006ம் ஆண்டு 1ம் பிரதிவாதி வழக்கு பட்டிகை 3ம் அயிட்ட சொத்தினை 3ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

7. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 3ம் பிரதிவாதி கட்சி சசேர்க்கப்படவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது, எனது மாமா திரு.முனிராஜ் தான் இவ்வழக்கை தாக்கல் செய்தார்.

**2ம் பிரதிவாதிதரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.